# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,513 — 1965 සැප්තැම්බර් 24 වැනි සිකුරාදා — 1965.9.24

14,513 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 317 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 305 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 315 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | எல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 317 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### தட்டெழுத்துச் சேவையில் ஆட்சேர்ப்பதற்கு (தமிழ்) பரீட்சை—நவம்பர் 1965

1. **பரீட்சைத் தேதி.**—தமிழ் தட்டெழுத்தில் தேர்ச்சிபெற்ற இருபாலாருமான பரீட்சார்த்திகளைத் தட்டெழுத்துச் சேவையில் சேர்ப்பதற்குப் போட்டிப்பரீட்சையொன்று தமிழில் பரீட்சைக் கொமிசனரினால் 1965, நவம்பர் 13 ஆந் தேதி பின்வரும் நிலையங்களில் நடாத்தப்படும் :—

கொழும்பு
யாழ்ப்பாணம்
வவுனியா
மட்டக்களப்பு
திருக்கோணமலை.

எந்த ஒரு நிலையத்திலும் போதியளவு பரீட்சார்த்திகள் தோன்றாவிடின் அது நிராகரிக்கப்படும்.

2. **சேவை நிபந்தனைகள்.**—(i) சித்தியடையும் ஆண்பரீட்சார்த்திகள் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுத் தகுதிகாண் நிலையில் நியமனம் பெறுவர்.

(ii) இப்பரீட்சையில் சித்தியடையும் பெண் பரீட்சார்த்திகள் முதலில் சகாயநிதி அடிப்படையில் நியமிக்கப்பட்டு நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்துக்குச் சோதனை நிலையில் நியமனம் பெறுவர். அவர்கள் 10 ஆண்டுச் சேவை முடியுமுன்னர் எக்காலத்திலாவது உபகாரச் சம்பளநிலையைச் சேரும் உரிமையுடையவர். ஒருமுறை இவ்விருப்புரிமையைப் பிரயோகித்தால் அதனைப் பின்னர் மீட்கமுடியாது. சோதனைக் காலத்தில் இவ்விருப்புரிமையைப் பிரயோகிக்கும் பெண் பரீட்சார்த்திகள் பின்னர் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர் ; அத்தகுதிகாண் நிலைக் காலமாவது, இன்னும் அவர்களின் சோதனைக் காலத்தில் எஞ்சியிருக்கும் காலத்துக்குச் சமமாகும்.

(iii) அவர்கள் இடமாற்றத்துக்குரியவர் ; இலங்கையில் எந்நிலையத்திற்காவது அவர்களை அனுப்பலாம்.

(iv) அரசாங்க மொழிக்கொள்கை நோக்கத்துக்காகப் புதிதாகச் சேர்ந்தோர் எனக் கருதப்படும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையிற்கொண்டுவருவதற்கு இப்போது நடைமுறையிலிருக்கும் அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோமென ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

நியமனம்பெறும் பரீட்சார்த்திகள், அரசாங்க மொழிக்கொள்கை நோக்கத்துக்குப் "புதிதாகச் சேர்ந்தவர்" ஆனால் தமது தகுதிகாண்/சோதனை நிலைக்காலத்தில் அரசாங்க மொழியாகிய சிங்கள மொழியில் தேர்ச்சிபெறல்வேண்டும். இப்பரீட்சார்த்திகளின் தகுதிகாண்/சோதனை நிலை முடிவடையும்போது அவர்களின் திருத்திகரமான சேவையையும் நடத்தையையும் பொறுத்தும், சிங்கள மொழித் தேர்ச்சிப்பரீட்சையில் சித்தியடைவதைப் பொறுத்தும் அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர்.

(v) அரசாங்க மொழிக்கொள்கை நோக்கத்துக்காகப் "புதிதாகச் சேர்ந்தோர்" எனக் கருதப்படும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், ஆண்டுக்கு 1,320 ரூபாவுக்கு முன்னருள்ள தகைமைத்தடையைக் கடப்பதற்கு முன்னர் சி. பா. தராதரப்பத்திரத் தரமுடைய சிங்கள மொழிப் பரீட்சையில் சித்தியடைதல்வேண்டும். குறிப்பிட்ட தேதிக்கு முன்னர் இப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறினால் ஆண்டு ஏற்றம் தள்ளிப்போட நேரிடும்.

(vi) படிகளும் பிறசேவை நிபந்தனைகளும் சம்பந்தமாக, இவ்வர்த்தமானியின் 1 ஆம் பகுதி, 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(vii) தட்டெழுத்தாளர் சேவை பொது எழுதுவினைஞர் சேவையில் ஒரு பகுதியாகாது. ஆகவே இச்சேவையிலுள்ளவர்கள் பொது எழுதுவினைஞர் சேவையின் நிர்வாக எழுதுவினைஞர் வகுப்புக்குப் பதவி ஏற்றம் பெறும் பரீட்சையெடுக்க அனுமதிக்கப்படமாட்டார்.

(viii) இப்பரீட்சையின் முடிவுகாரணமாய் நியமனம்பெறும் பரீட்சார்த்திகள் தாம் நியமனம்பெறும் அலுவலகத்தில் இருக்கும் எந்த மாதிரியான தட்டெழுத்துப்பொறியிலாவது நிமிடத்துக்கு 20 சொல்வீதம் தமிழில் அடித்தல் வேண்டும்.

3. **சம்பளத்திட்டம்.**—ஆண்டுக்கு 960 ரூபாவிலிருந்து ஆண்டு ஏற்றம் 72 ரூபாவாக ஆண்டுக்கு 2,688 ரூபாவரை செல்லும் சம்பளத்தில் தட்டெழுத்தாளர் சேவையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் நியமனம் பெறுவர். இச்சம்பளத்திட்டத்தில் ஆண்டுக்கு 1,320 ரூபா, 1,608 ரூபா, 2,184 ரூபாவுக்கு முன்னர் தகைமைத் தடையுண்டு.

4. **தகவுத்திறன்.**—பொது நிபந்தனைகள் :—

(i) பரீட்சார்த்திகள் நற்பண்புடையராயிருத்தல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும்.*

(iii) பரீட்சார்த்திகள் குறைந்தபட்சம் பின்வருவனவற்றிலொன்றையாவது உடையராயிருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் ; அல்லது

(ஆ) இலண்டன் மற்றிக்குலேசன் தராதரப்பத்திரம் அல்லது கேம்பிரிச்சு சிரேட்ட தராதரப்பத்திரம் ; அல்லது

(இ) இலங்கை சிரேட்ட மனையியல் தராதரப் பத்திரம் ; அல்லது

(ஈ) பரீட்சைத் திணைக்களத்தின் சிங்கள/தமிழ் வர்த்தகத் தராதரப்பத்திரம் ; அல்லது

(உ) சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியில், எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்பகணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் ஆகிய ஒன்றிலும் பிற நான்கு பாடங்களிலும் கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரண தரம்) ; இப்பாடங்களுள் ஒரே நேரத்தில் ஐந்து பாடங்களிலாவது சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஊ) இலண்டன் வணிகக் கழகத்தின் இலங்கைத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வர்த்தகக் கல்வித் தராதரப் பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) (வெளிநாடுகள்) அல்லது உயர்தர வர்த்தகக் கல்வித் தராதரப் பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) (வெளிநாடுகள்) ; அல்லது

(எ) இலங்கை வணிகக் கழகத்தினாலும் இலங்கை கல்வித் திணைக்களத்தினாலும் வழங்கப்படும் வர்த்தகக் கல்வித் தராதரப்பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) அல்லது உயர்தர வர்த்தக கல்வித் தராதரப்பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) ; அல்லது

(ஏ) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் (கணக்குப் பதிபவர்க்கான அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளருக்கான) வர்த்தகத் தராதரப்பத்திரம்.

**குறிப்பு.**—மேலே கூறப்பட்ட பரீட்சைகளில் ஏதேனும் ஒன்றையெடுத்து இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்களின் முடிவுத் தேதிக்கு முன்னர் அதன் பெறுபேறுகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iv) பரீட்சார்த்திகள் 1965 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதியில் 17 வயதுக்குக் குறையாதவர்களாயும் 26 வயதுக்கு மேற்படாதவர் களாயுமிருத்தல் வேண்டும்.

5. **தகவுத்திறன்.**—இலங்கையிலுள்ள ஐக்கியராச்சியச் சேவையிற் சேர்ந்திருக்கும் சிவில் உத்தியோகத்தர்களுக்கும் யுத்தப்படைகளில் முன் சேவையாற்றியவர்களுக்குமான விசேட சலுகைகள் :—

(i) இலங்கையில ஐக்கிய இராச்சியச் சேவையிலிருந்து 1956 ஆம் ஆண்டு யூலை மாதம் 6 ஆம் திகதியன்று அல்லது அதற்குப்பின் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும், அல்லது தளங்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் நிச்சயித்ததன் பயனாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் இலங்கையரான சிவில் உத்தியோகத்தர்களும், நாரா‌கென்பிற்றவில் (அடைடேர்சன நிலையம்) இருந்த இராச கடற்படைக் கம்பியிலி நிலையத்தை திருக்கோணமலை மாவட்டத்தில உள்ள பெரிய கரைச்சி என்னும் இடத்துக்கு மாற்ற அரசாங்கம் நிச்சயித்ததன பயனாக, 1954 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆந் திகதிக்குப் பின் அந் நிலையத்திலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் பின்வரும் சலுகைகளுக்கு அருகராவர் :—

(அ) 6 (iv) ஆம் பந்தியில விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், ஐக்கியராச்சியச் சேவைகளில் அவர்கள் சேவையாற்றிய காலத்தைத் தங்கள் வயதில இருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர் ; ஆனால் அப்படிச் செய்வதற்கு அத்தகைய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருக்கவேண்டும் ;

(ஆ) 1965 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் ஐக்கியராச்சியச் சேவைகளில் தொடர்ச்சியாகக் குறைந்த பட்சம் நாலு ஆண்டுச் சேவை திருப்திகரமாக முடித்து 4 (iii) பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் கல்வித் தகைமை களைக் கொண்டிருக்காதவர்கள், 7 (iii) (ங) (i) ஆம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்தபின, இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(ii) யுத்தச் சேவைகளில் சேவையாற்றியவர்கள் பின்வரும் சலுகைகளுக்கு அருகராவர் :—

(அ) (iv) பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், அச்சேவையில் அவமானம் சூட்டி விலக்கப்பட்ட அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது இழுக்குடன் பதவி நீக்கப்பட்ட அல்லது எவ்வொழுக்கவீனம் காரணமாகவேனும் சேவையிலிருந்து விலகவேண்டியிருந்தவர்கள அல்லாத ஒதுக்கப்படையினர் அல்லது உத்தியோகத் தர்களும் சேவையாளர்களும் ஆகிய முன்னைநாள் யுத்தச் சேவையாளர்கள் நியமப்படையில தாம் ஆற்றியசேவைக் காலத்தைத் தம் வயதில் இருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர் ;

(ஆ) நியமப்படையில் நாலாண்டுக்குக் குறையாத காலச் சேவையாற்றி 4 (iii) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் கல்வித் தகைமைகளைக் கொண்டிருக்காதவர்கள் 7 (iii) (ங) (i) பந்தியில சொல்லப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருப்பின் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

6. **தகவுத்திறன்.**—ஆட்குறைப்பின் பயனாக வேலையிழந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் :—நிரந்தரமுறையிலோ தற்காலிக முறையிலோ அரசாங்க சேவையிலிருந்து வேலையோ, ஒழுக்கமோ திருத்திகரமாகவில்லை என்ற காரணத்தினாலன்றி வேறு காரணங்களால் வேலையிழந்திருப்பவர்கள் பின்வரும் சலுகைகளுக்கு அருகராவர் :—

4 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், பதவியிலிருந்து நீக்கப்பட்டது அல்லது திருப்தியற்ற வேலை அல்லது பதவியிலிருந்து தாமாக விலகிக்கொண்டது காரணமாக வேலையிழக்காது அரசாங்கத்திற் சேவையாற்றிய காலத்தைத் தம் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **தகவுத்திறன்.**—அரசாங்க ஊழியர்களுக்கு விசேட சலுகைகள் :—

(i) **படியெடுப்போரும், தட்டெழுத்து-எழுது வினைஞரும்.**—1965, ஒக்ரோபர் 1 ஆந் தேதியில் ஈராண்டுகளுக்குக் குறையாமல் நிரந்தரசேவை யாற்றியுள்ள படியெடுப்போரும் தட்டெழுத்து-எழுதுவினைஞரும், 1965, நவம்பர் 1 ஆந் தேதியில் 45 வயதுக்கு மேற்படாவிடில் கல்வித்தகைமை யில்லாவிடினும் இப்பரீட்சையெடுக்க அனுமதிக்கப்படுவர்.

(ii) **நிரந்தர ஊழியர்.**—கீழே கூறியுள்ள (க), (ங) வகைகளில் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிப்பவர்கள் 7 (i) ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள சலுகைகளுக்கு அருகதையற்றிருப்பின், பரீட்சையெடுக்கவேண்டுமாயின் :—

(க) 1965, ஒக்ரோபர் 1 ஆந் தேதியில் சேவையிலிருந்து :—

(i) 4 (iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) 1965, நவம்பர் 1 ஆந் தேதி 45 வயதுக்குக் கீழ்ப்பட்டவராயிருத்தல வேண்டும்.

(iii) தட்டெழுத்தாளர் சேவையில் நியமனம் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் தலைவர்கள் அவர்களை விடுதலை செய்யத் தயாராயிருத்தல் வேண்டும்.

---

*அரசாங்க சேவையிற் சேரும் சகல நோக்கங்களுக்கும் " இலங்கையர் " என்னும் பதம், பரம்பரையாலோ, பதிவினாலோ இலங்கைப் பிரசையா யுள்ள ஒருவர் என வரையறை செய்யப்பட்டுள்ளது.

(ங) 1965, ஒக்ரோபர் 1 ஆந் தேதிக்கு உடனடியாக முன்னர் குறைந்த பட்சம் நான்கு ஆண்டுத் தொடர்பான சேவையேனும் அரசாங்கத்தில் ஆற்றியிருந்தால் :—

(i) கீழ்க்கூறப்பட்டவற்றுள் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் :—

(அ) கேம்பிரிட்சு கனிட்ட தராதரபத்திரம் ;

(ஆ) கல்வித்திணைக்கள க. பா. தராதரபத்திரம் ;

(இ) கல்வித்திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிக்கூடத்தின் க. பா. தராதரப்பத்திரம் ;

(ii) 1965, நவம்பர் 1 ஆந் தேதியில் 45 வயதுக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தட்டெழுத்தாளர் சேவையில் நியமனம் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் குறித்த திணைக்களத் தலைவர் விடுதலை செய்யத் தயாராயிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—(அ) மேற்போந்த (க) (ங) வகைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் 1956, செற்றம்பர் 24 ஆந் தேதிக்கு முன்னர் நியமிக்கப்பட்டு இப்பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் அரசாங்க மொழிக்கொள்கை நோக்கத்துக்காக " முன்னர்ச் சேர்ந்தோர் " எனக் கருதப்படுவர்.

(ஆ) புகையிரதம், தபால், அளவை, ஆசுபத்திரி, சுங்க எழுதுவினைஞர் சேவைகள் போன்ற திணைக்கள எழுதுவினைஞர் சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் 7 (ii) (க) (ங) பந்திகளின்படி இப்பரீட்சையெடுக்க அருகதையுடையவராகார். எனினும் இப்பொழுது ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்ட திணைக்கள எழுதுவினைஞர் சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் அருகதையுடையவராவர்.

(iii) தற்காலிக ஊழியர் :—கீழே தரப்பட்டுள்ள (க) (ங) வகைகளில் அரசாங்கத்தில் தற்காலிகமாயுள்ளவர்கள் இப்பரீட்சையெடுக்க அனுமதிக்கப்படுவர் :—

(க) 1965, ஒக்ரோபர் 1 ஆந் தேதிக்கு உடனடியாக முன்னர் குறைந்த பட்சம் ஓராண்டாவது அரசாங்கத்தில் தொடர்ந்து சேவை செய்திருப்பதுடன்—

(i) 4 (iii) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல்வேண்டும்.

(ii) 1965, நவம்பர் 1 ஆந் தேதியில் 45 வயதுக்குட்பட்டவராயிருத்தல்வேண்டும்.

(ங) 1965, ஒக்ரோபர் 1 ஆந் தேதிக்கு உடனடியாக முன்னர் குறைந்த பட்சம் நான்கு ஆண்டுச் சேவையாவது அரசாங்கத்தில் தொடர்ந்து செய்திருப்பதுடன் —

(i) 7 (ii) (ங) (i) பந்தியில் குறிப்பிட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல்வேண்டும்.

(ii) 1965, நவம்பர் 1 ஆந் தேதியில் 45 வயதுக்குட்பட்டவராயிருத்தல்வேண்டும்.

(iv) அமய ஊழியர் :—கீழே தரப்பட்டுள்ள (க) (ங) வகைகளிலுள்ள உத்தியோகத்தர், தொடர்பாக ஆறு மாதகாலத்துக்குச் சேவை செய்திராவிடினும் 1965, நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஐந்தாண்டு காலத்துக்குள் சேவை செய்திருப்பின் 1965, நவம்பர் 1 ஆந் தேதியில் 45 வயதுக்குட்பட்டவராயின் இப்பரீட்சையெடுக்க அனுமதிக்கப்படுவர் :—

(க) நிரந்தர தட்டெழுத்தாளரை நியமித்ததன் காரணமாக 1965, யூன் 30 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ சேவையினின்றும் நிற்பாட்டப்பட்ட அமய தட்டெழுத்தாளர்.

(ங) இப்பொழுது சேவையிலுள்ள அமய தட்டெழுத்தாளர்.

8. **விண்ணப்பங்கள்.**— (i) இவ்வறிவித்தலின் இறுதியில் இப்பரீட்சைக்குரிய மாதிரி விண்ணப்பப்பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களை அதற்கிணங்க முழுத்தாளில் தயாரித்தல்வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் பதிவுக்கடிதம் மூலம் பரீட்சைக்கொமிஷனர், த. பெ. இல. 1503, மலாய் வீதி என்னும் விலாசத்தில் 1965, ஒக்ரோபர் 6 ஆந் தேதியிலன்றோ அதற்கு முன்னரோ பெறுமாறு அனுப்பப்படல்வேண்டும். குறித்த தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரும் விரும்பும் பரீட்சை நிலையமும் தெளிவாய் எழுதப்படல்வேண்டும். இப்பரீட்சை நடாத்தப்படும் பரீட்சைநிலையங்கள் இவ்வறிவித்தலின் 1 ஆம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ளது.

(iii) விண்ணப்பங்களில் முறையே 20 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளைக்கொண்டு அவை பரீட்சார்த்தியின் கையொப்பத்தாலும் தேதியாலும் அழிக்கப்பட்டிருத்தல்வேண்டும்.

(iv) ஏற்கனவே அரசாங்கப்பகுதிகளில் அலுவல்பார்க்கும் பரீட்சார்த்திகள், தாங்கள் கடமையாற்றும் அரசாங்கப்பகுதிகளின் தலைவர்களினூடாகவே தங்கள் விண்ணப்பங்களை அனுப்புதல்வேண்டும். 6 ஆம் பந்தியின்கீழ் அருகதைகோரும் பரீட்சார்த்திகள், தாம் கடைசியாகச் சேவையாற்றிய திணைக்களத்தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல்வேண்டும். பரீட்சார்த்தி எவராவது அவ்வாறு செய்யத் தவறினால் அவர் தகுதியிழந்தவராகக் கருதப்படுவர். 1965 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6 ஆந் தேதியன்றோ, அதற்கு முன்போ பரீட்சை அதிகாரியிடம் சேரும் வண்ணம் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் செய்து, பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவர்களுக்கு நேரகாலத்தோடேயே அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பங்கள் பரீட்சைக் கொமிஷனருக்கு அல்லது வேறு எந்த உத்தியோகத்தருக்கேனும் தனியான முறையில் அனுப்பப்படலாகாது.

9. **பரீட்சைக்கு அனுமதி.**—(i) பரீட்சை அதிகாரி தாம் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கெல்லாம் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப்பரீட்சையை மேற்பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குத் தங்கள் அனுமதிப் பத்திரங்களைக் காட்டுதல்வேண்டும். அத்தகைய பத்திரத்தைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எடுத்தல்வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை மண்டபத்திற் சமுகமளிக்கும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

நேரசூசியும் பரீட்சார்த்திகளுக்குரிய விதிகளுமடங்கிய பிரதியொன்று அனுமதிப்பத்திரத்தோடு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோன்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைத்தினத்தன்று தமது அனுமதிப்பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல்வேண்டும்.

இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளின் விதிகள் வேறாக அச்சிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவர்.

பரீட்சைக்குக் குறைந்தபட்சம் ஏழுநாட்களுக்கு முன்னர் அனுமதிப்பத்திரம் பெறாத பரீட்சார்த்திகள் மலாய் வீதி, கொம்பனித்தெரு, த. பெ. இல. 1503, கொழும்பு என்னும் விலாசத்திலுள்ள பரீட்சை அதிகாரியுடன் (தந்தி விலாசம் : " எக்சாம்ஸ் " கொழும்பு) உடனடியாகத் தொடர்பு கொண்டு அனுமதிப்பத்திரத்தைத் தான் இதுகாறும் பெறவில்லையென அறிவித்துக் கீழ்வரும் தகவலையும் கொடுத்தல்வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் :—

(2) முழுப்பெயர் :—

(3) முழுத் தபால் விலாசம் :—

(4) பரீட்சை நிலையம் :—

(5) தபாற்கந்தோர், பதிவு இல., அனுப்பிய தேதி :—

(ii) எனினும், பரீட்சை அதிகாரி தமது உசிதாசாரப்படி, பரீட்சார்த்தியொருவருக்கு இப்பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சையெடுத்தமை பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடிசெய்யப்படும்.

10. **அடையாளச் சீட்டுகள்.**—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்துக்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) தபாற்கந்தோர் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச்சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்) ;

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாங்கப் பகுதியின், பொதுக் கூட்டுத்தாபனத்தின் அல்லது மற்றும் நியதிச் சட்டமுறையான அமைப்பின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்துக்கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம் ;

(ஈ) கடவுச் சீட்டின் (பாஸ்போட்) அளவுள்ள புகைப்படம், அதன் பின்பக்கத்தில் கீழ்காட்டப்படும் அத்தாட்சி, அவ்வாறு அத்தாட்சிப் படுத்தக்கூடியவர் ஒருவரால் கையொப்பப் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

" பின்புறத்திலுள்ள புகைப்படம்..............................................................என்பவருடைய
(பரீட்சார்த்தியின் முழுப்பெயர்)

தென்பதையும் அன்னாரின் கையொப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதென்பதையும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

.............................................................
அத்தாட்சி செய்பவரின் கையொப்பம்.

.............................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

.............................................................
பெயரும் பதவியும்.

தேதி : ..............................................

மேலே குறிப்பிட்டுள்ள சாதனங்களில் ஒன்றைக் கொண்டுவராத பரீட்சார்த்தியொருவரின் பரீட்சையுரிமை தற்காலிகமானதெனக் கருதப்படும். பரீட்சை ஆணையாளரின் உசிதாசாரப்படி இத்தகைய பரீட்சையுரிமை நிராகரிக்கப்படலாம்.

11. **தகுதிச் சாதனங்கள் :**—(i) விண்ணப்பத்தோடு எவ்வித சாதனங்களும் சேர்த்து அனுப்பப்படலாகாது. ஆனால், பத்திரத்திலேயே கேட்கப்பட்டவாறு தேவையான, விவரங்களெல்லாம் கொடுக்கப்பட்டிருத்தல் வேணடும். இந்த வகைகளிளெல்லாம் நிறைவு பெற்றிராத ஒரு விண்ணப்பம் அதன் தகுதிககேற்பச் சீர்தூக்கி ஆராயப்பட்டு, நிராகரிககபபடினும்படலாம்.

(ii) தகைமை பெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து, அவர்கள் தங்கள் தகுதியுடைமையை நிறுவுவதற்காகச் சாதனச்சான்று வேண்டப்படும். அத்தகைய பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சையில் (வைக்கப்பட்டால்) இச்சாதனங்களைச் காட்டுதல் வேண்டும். அல்லது பரீட்சை அதிகாரி கேட்கும்போது தாமதமின்றி அவற்றைப் பதிவுததபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் தேவையாகும் :—

(அ) பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்டுள்ள ஒரு நற்சான்றுப் பத்திரம்.

**குறிப்பு :**—பரீட்சார்த்தி ஓர் அரசாங்க பாடசாலையில் அல்லது உதவிபெறும் பாடசாலையின அதிபரிடமிருந்தே நற்சான்றுப்பத்திரம் பெறுதல வேண்டும். அல்லாவிடின் அதை ஒரு சமாதான நீதவானிடமிருந்தோ, வழக்கறிஞரிடமிருந்தோ, நியாயதுரந்தரிடமிருநதோ, நொத்தாரிசிடமிருநதோ, பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருநதோ, 2,400 ரூபாயோ, அதற்கு மேலோ ஆணடுச் சம்பளமாகப்பெறும் ஒரு நிரந்தரமான அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம். அல்லது பொதுவாகக் கூறுமிடத்து, பிரசித்திப்பெற்றவரும் சாதாரணமாக அறியப்பட்டவருமான ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நற்சான்றுப் பத்திரம் வழங்குபவரின் பெயரும், பதவியும், விலாசமும் அதில தெளிவாகக் காட்டப்படல்வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் பரீட்சார்த்திகள் நற்சான்றுப்பத்திரங்கள் காட்டுமாறு வேண்டப் படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்புப்பதிவு செய்யப்படாத பரீட்சார்த்திகளின் பொருட்டு) பதிவுகாரியகர்த்தரால் கொடுக்கப்பட்ட விசேட வயது சாட்சிப்பத்திரம், பிறப்புச்சான்றற்ற பரீட்சார்த்தி ஒருவர் தமது நேர் தகவு வயதுச்சான்றிதழை மட்டுந் தரும்பொழுது, அவர் அச்சான்றிதழ் குறிப்பிடும் பிறப்பாண்டின் யூலை முதலாந் தேதி பிறந்தவராகக் கருதப்படுவர்.

**குறிப்பு :**—(i) பாடசாலைத் தேவைகளுக்கு அல்லது கல்வித் தேவைகளுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்பத்தாட்சிப் பத்திரமோ, பிறப்புப் பதிவினின்றும் எடுக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பகுதியோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ii) சத்தியக்கடுதாசியோ, ஞானஸ்நான அத்தாட்சிப்பத்திரங்களோ பிறப்பத்தாட்சிப் பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

(iii) பிறப்பத்தாட்சிப் பத்திரத்திலுள்ள பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும்/உபயோகிப்பனவும் இப்பரீட்சையெடுப்பதற்குக் கொடுத்துள்ளதும்/கொடுத்துள்ளனவுமான பெயரினின்றும் வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, 1950 ஆம் ஆண்டின் 17 ஆம் இல. பிறப்பு இறப்புப் பதிவுச்சட்டத்தின் 27 அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளினபடி உடனே நடவடிக்கை எடுத்தல வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் இருந்துகொண்டு 18.8.57 இன் 394 ஆம் இல. திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம் பெயர்களை மாற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவு இடாப்பிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்படமாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவத்தாட்சிப்பத்திரம் அல்லது பரம்பரைப் பிரசையென்னும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் உத்தியோகபூர்வமான மூலக் கடிதம் (ஏற்புடையவிடத்து),

(ஈ) கல்வித் தகைமை பற்றிய மூல அத்தாட்சிப்பத்திரம், அல்லது, அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படாதிருக்குமிடத்து, உத்தியோக பூர்வமான பிறசாதனம் (உ–ம். இலங்கைப் பொதுக்கல்வித் தராதரப்பத்திரம் சாதாரண தரம்) தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட பெறுபேற்று அறிவிப்புத் துண்டு, அல்லது பரீட்சார்த்தியின பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற மூலக் கடிதம்,

(உ) இலங்கையில் உள்ள ஐக்கியராச்சியச் சேவைகளில் ஒரு சிவில் உத்தியோகத்தரிடமிருந்து சேவையாற்றிய தற்காகச் சான்றிதழின் மூலப்பிரதி அல்லது போர்ப் படைகளில் சேவையாற்றியதற்காகச் சான்றிதழ், (5 ஆம் பந்தியில் காட்டப்பட்ட பரீட்சார்த்திகள் விடயத்தில்),

(ஊ) அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றியதற்கான சான்றிதழின் மூலப்பிரதி (6 ஆம் பந்தியில் காட்டப்பட்ட பரீட்சார்த்திகள் விடயத்தில்),

(எ) அடையாளச்சீட்டு (நேர்முகப்பரீட்சை நடந்தால், அப்போது மாத்திரம்).

(iv) விண்ணப்பம் செய்யும்போது தேவையான சாதனங்கள் எல்லாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். “ நேர்முகப்பரீட்சை ” நடந்தால், அப்போது தேவையான சாதனங்களைக் காட்ட முடியாமல் இடர்ப்படும் அல்லது பரீட்சை அதிகாரி கேட்கும்போது அவற்றை அனுப்பிவைக்கத் தாமதிக்கும் எப்பரீட்சார்த்திகளினதும் பரீட்சைக்கான பதிவு நிராகரிக்கப்படும்.

12. **பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம் :**—இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும்போதோ, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது, அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

பரீட்சாத்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவுக்கு உட்படப் பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அல்லது அவர் நியமனம் பெற்றுச் சேவை செய்யுங் காலத்தில் எப்போதாவது அவர் இப்பரீட்சையெடுப்பதற்குத் தகுதியற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

13. **பணம் திருப்பிக் கொடுத்தல்.**—எச்சந்தர்ப்பத்திலாவது பணம் எதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகக் கொடுத்த கட்டணங்களை வேறெப்பரீட்சைக்கேனும் மாற்ற முடியாது.

14. **பரீட்சை எடுப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விடுதலை.**—பரீட்சை அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோன்றுவதற்காக, அவர்களுக்கு அவர்களுடைய திணைக்களத் தலைவர்கள் விடுதலை (கடமை விடுதலையன்று) வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.

15. **பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைக்குரிய பாடங்களும் புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன. எல்லா விடைத் தாள்களிலும் கூடாத கையெழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். வாசிக்க முடியாதவகையிலும் எழுதும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவரென நீக்கிவிடப்படுதற்கும் ஆளாவர்.

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (1) | தமிழ் வியாசம் 1 மணித்தியாலம் .. .. .. | 100 |
| (2) | தமிழ் தட்டெழுத்து (ஆகக்குறைந்த கதி : நிமிடத்துக்கு 20 சொற்கள்) 20 நிமிடம் .. | 150 |
| (3) | பொது அறிவு 30 நிமிடம் .. .. .. | 50 |
| (4) | பொது விவேகம் 30 நிமிடம் .. .. .. | 50 |

**குறிப்பு.**—(i) பரீட்சார்த்திகள் தங்கள் தட்டெழுத்துப் பொறிகளைக் கொண்டு வருமாறு வேண்டப்படுகின்றனர்.

(ii) அவ்வாறு செய்ய இயலாத பரீட்சாத்திகள் ஒரு தட்டெழுத்துப் பொறியைத் தமக்குள்ளே உபயோகிக்க ஒழுங்கு செய்யலாம். குறித்த ஒரு நாளில் ஒரு தட்டெழுத்துப் பொறியை நான்கு பேருக்கு மேலாக உபயோகிக்கலாகாது. ஒரு தட்டெழுத்துப் பொறியைப் பலர் உபயோகிக்கும்போது, பரீட்சார்த்திகள், தங்களுள் எவருக்கேனும் குறிப்பிட்ட மிக முந்திய நாளில் தட்டெழுத்துப் பரீட்சைக்குச் சமூகமளித்து, பரீட்சை தொடங்க முன்னர் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்தல் வேண்டும். மேற்பார்வையாளர், தனித்தனியாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நாளைக் கவனியாது அவர்கள் எல்லோரையும் ஒரே நாளில் எடுக்க ஒழுங்கு செய்வர். இவ்வொழுங்கு பற்றி பரீட்சார்த்திகள் பிற அறிவித்தல் யாதேனும் கொடுக்க வேண்டியதில்லை.

(iii) 1965 நவம்பர் 12 ஆந் தேதிக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டு இப்பரீட்சைக்குத் தோன்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பரீட்சை நிலையங்களுக்கு அலுவலகத் தட்டெழுத்துப் பொறிகளைக் கொண்டு செல்லத் திணைக்களத் தலைவரால் அனுமதிக்கப்படுவர். இச்சலுகையைப் பயன்படுத்தும் ஒவ்வொரு உத்தியோகத்தரும், அத்தட்டெழுத்துப்பொறி பாதுகாப்பாகத் திருப்பிக்கொடுக்கப்படுமென்றும் அதை உபயோகிக்கையில் ஏற்படும் சேதம் முதலியவற்றுக்குத் தாமே பொறுப்பாளியென்றும் எழுத்துமூலக் கூற்றைக் கொடுத்தல் வேண்டும்.

(iv) மேலே (ii) ஆம் பந்தியில் அனுமதித்தவாறொழிய ஒரு பரீட்சார்த்திக்குத் தட்டெழுத்துப் பரீட்சைக்குக் கொடுத்த தேதியானது சாதாரணமாய் மாற்றப்படமாட்டாது.

(v) பரீட்சை அதிகாரி பரீட்சை மண்டபத்தில் தட்டெழுத்துப் பொறிகளைக் கொடுக்கமாட்டார்.

(vi) தட்டெழுத்தில் புள்ளிகள் கொடுக்கும்போது தூய்மை, செம்மை, கதி ஆகியன கணக்கிடப்படும்.

16. **முடிவுகளை வெளியிடலும் நியமனங்கள் கொடுத்தலும்.**—சித்தியெய்தும் பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் ; வெற்றுப் பதவிகள் ஏற்படும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

17. **வைத்தியப் பரீட்சை.**—தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கையில் எப்பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடனலமுடையவரெனக் காட்டுவதற்கு வைத்தியப்பரீட்சையொன்றில் தேறுமாறு வேண்டப்படுவர்.

18. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எந்த விடயத்தையும் திறைசேரிப் பிரதிச்செயலாளர் தமது உசிதாசாரப்படி தீர்த்து வைப்பர்.

பொதுத்திறைசேரி, கொழும்பு,
1965 ம் ஆப் செத்தம்பர் மீ 20 ந் உ.

ச. எ. குறே,
திறைசேரி மேலதிகப் பிரதிச்செயலாளர்.

சுட்டிலக்கம் :..................
(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

## தட்டெழுத்தாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்குப் பரீட்சை (தமிழ்)

1965 நவம்பர்

**விண்ணப்பப்பத்திரம்**

| | |
|---|---|
| 1. (அ) வழமையான கையொப்பம் : | |
| முதலெழுத்துக்களுடன் பெயர் : (பெரிய எழுத்தில்) | |
| எல்லா முழுப்பெயர்களும் : (திரு/திருமதி/செல்வி என்பதைக்குறிப்பிடுக.) | |
| (ஆ) முழுவிலாசம் : (அரசாங்க ஊழியர் அரசாங்க திணைக்கள விலாசத்தைத் தரல் வேண்டும்) | |

| | | |
|---|---|---|
| 2. நீர் விரும்பும் பரீட்சை நிலையம் : (நீர் வசிக்கும் இடத்துக்கு அண்மையிலுள்ளது) | முதலாவதாக விரும்பும் நிலையம் | இரண்டாவதாக விரும்பும் நிலையம் |
| | | |

| | | |
|---|---|---|
| 3. இலங்கைப் பிரசையானால்,—<br>(i) வம்சாவழிபபிரசையா அல்லது<br>(ii) பதிவுப்பிரசையா | ........................ | (அ) பிறந்த இடம்—<br>(i) விண்ணப்பிப்பவர் ................ ................................<br>(ii) விண்ணப்பிப்பவரின் தந்தை ........ ................................<br>(iii) விண்ணப்பிப்பவரின் தந்தை வழிப் பாட்டன் ...................... ................................<br>(iv) விண்ணப்பிப்பவரின் தந்தை வழி முப்பாட்டன் ...................<br>குறிப்பு :—பரீட்சார்த்தியும் அவரின் தந்தையும் இலங்கையில் பிறந்தவர்களானால் (i), (ii) மட்டும் நிரபபப்படல் வேண்டும். பரீட்சார்த்தியோ அவரின் தந்தையோ இலங்கைக்கு வெளியே பிறந்திருந் தால் (i), (ii), (iii), (iv) நிரப்பப்படல்வேண்டும். |

| | ஆண்டு | மாதம் | தேதி |
|---|---|---|---|
| 4. (அ) பிறந்த தேதி : | .................... | ................ | ................ |
| (ஆ) 1965, நவம்பர் 1 ஆந் தேதியில் வயது : (ஆண்டுகளும் மாதமும்) | .................... | ................ | ................ |

| | தாபனத்தின் பெயர் | பதவிப் பெயர் | தேதி | | காலம் | | விலக்கப்பட்டதன் காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | ஆண்டு | மாதம் | |
| 5. இலங்கையில் ஐக்கிய இராச்சிய சேவையில் சிவில் உத்தியோகத்தராயிருந்த சேவையின் விவரங்கள் : | | | | | | | |
| மொத்தம் .. | | | | | | | |

| | பிரிவின் பெயர் | நிலை | தேதி | | காலம் | | சேவையிலிருந்து விலக்கியமைக்குக் காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | ஆண்டு | மாதம் | |
| 6. படைச் சேவையில் முன்னர் சேவை செய்திருந்தால், முறையான படைச் சேவையில் உமது சேவையின் விவரங்களைத் தருக : | | | | | | | |
| | | | | மொத்தம் .. | | | |

| | திணைக்களம் | பதவி | பதவி நிரந்தரமானதா, தற்காலிகமானதா | தேதி | | காலம் | | சேவையிலிருந்து விலக்கப்பட்டதற்குக் காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இருந்து | வரை | ஆண்டு | மாதம் | |
| 7. குறித்த அறிவித்தலின் 6 ஆம் பந்தியில் ஆட்குறைபபின் பயனாக வேலையிழந்த அரசாங்க ஊழியருக்கு அளிககப்பட்ட விசேட சலுகைகளின் கீழ் அனுமதிகோரின், அரசாங்கத்தின் கீழ் ஆற்றிய சேவையின் முழு விவரங்களையுந் தருக : | | | | | | | | |
| | | | | | மொத்தம் .. | | | |

8. குறித்த அறிவித்தலின் 7 ஆம் பந்தியின் கீழ் நிரந்தரமாய் அல்லது தற்காலிகமாய் அரசாங்க பதவியிலுள்ளவர்களுக்கு அல்லது அமைய தடெழுத்தாளர்களுககு அளிக்கப்பட்ட விசேட சலுகையின்கீழ் அனுமதிகேரின் பின்வருவனவற்றைக் கூறுக :—

(அ) எந்தவகையைச் சேர்நதிருக்கின்றீர்—7 ஆம் பந்தியைப்பார்க்க :

(ஆ) தற்போதய பதவி :

(இ) குறித்த பதவி நிரந்தரமானதா, தற்காலிகமானதா அல்லது அமைய பதவியா :

(ஈ) திணைக்களத்தின் பெயர் :

(உ) சேவைக்காலம் (தேதிகளுடன்) :

(உமது சேவை நிரந்தரமானதாயும் தற்காலிகமானதாயுமிருந்தால் விவரங்கள் தனித்தனியாகக் கொடுக்கபபடல் வேண்டும்.)

(ஊ) 1965, நவம்பர் 1 ஆம் தேதியில் வயது :

————————————————இருந்து
————————————————வரை.
காலம் : ஆண்டு:——— மாதம் : ——— நாள்———

9. பரீட்சைக்கு அனுமதிபெறுவதற்குச் சித்தியடைந்த பரீட்சையின் விவரங்கள்—

(அ) பரீட்சையின் பெயரும், ஆண்டும் தேதியும் :

(ஆ) நிலையம் :

(இ) சுட்டிலக்கம் :

(ஈ) க. பா. த. ப. அல்லது அதையொத்த பரீட்சை பள்ளிக்கூடத்தினுல் நடாத்தப்பட்டதானல், பின்வருவனவற்றைக் கூறுக :—

(i) பள்ளிக்கூடத்தின் பெயர் :

(ii) விலாசம் :

(iii) முகாமையாளர் :

(மறு பக்கத்திலுள்ள சான்றிதழ் நிரப்பப்படல் வேண்டும்)

| | |
|---|---|
| 10. அரசாங்கத்தில் ஆற்றிய சேவை உட்பட முந்திய சேவைகள் யாவற்றையுங் கூறி, அவற்றின் தேதிகளையும், அச்சேவைகளை நிறுத்தியதன் காரணங்களையும் கூறுக : —<br>(அ) தாபனம்/வேலைக்கமர்த்தியோர்/அரசாங்கத் திணைக்களத்தின் பெயர்:<br>(ஆ) தொழிலின் தன்மை :<br>(இ) சேவைக் காலம் :<br>(ஈ) அத்தகைய சேவையினின்றும் விலகியதற்குக் காரணம் : | |
| 11. நற்சாட்சிப்பத்திரம் வழங்குபவரின் பெயரையும் பதவிப் பெயரையும் (உண்டானால்) விலாசத்தையும் தருக : | |
| 12. எந்த ஒரு குற்றத்தின் பேரிலாவது நீர் குற்றவாளியாகக் காணப்பட்டோ அல்லது குற்றஞ்சாட்டப்பட்டோ அல்லது அழைப்பாணைபெற்றோ இருந்தீரா ? அப்படியானால் குற்றத்தின் தன்மையையுந் தேதியையும், நீதிமன்றத்தின் பெயரையும் வழக்கிலக்கத்தையுந் தருக : | |
| 13. கீழ்வரும் விருப்புரிமைப் பாடத்தை எடுத்திருக்கிறீரா ?<br>தமிழ் சுருக்கெழுத்து : | |

**9 (ஊ) கூண்டில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்படவேண்டிய பத்திரம்***

(i) ———— என்னும் விலாசத்திலுள்ளதும்
(பள்ளிக்கூட/கல்லூரி விலாசம்)

(ii) ———— முகாமையிலுள்ளதுமாகிய
(முகாமை)

(iii) ————என்னும் பள்ளிக்கூடத்தின்/கல்லூரியின் தலைமையாசிரியர்/அதிபர் ஆகிய ———— எனப்படும் நான் ————————
(பள்ளிக்கூடத்தின/கல்லூரியின் பெயர்) (பரீட்சார்த்தியின் முழுப்பெயர்)
என்பவர், கல்வித்திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இப்பள்ளிக்கூடத்தின்/இக்கல்லூரியின் மாணவராயிருந்து இப்பள்ளிக்கூடத்தினால்/இக்கல்லூரியினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியெய்தினார் என அத்தாட்சிப்படுத்துகின்றேன். கல்வித் திணைக்களம் நடாத்தும் க.பா.த.ப. பரீட்சைக்கு இப்பரீட்சை சமமானதாகும்.

———,
அதிபர்/தலைமையாசிரியரின் கையொப்பம்.

தேதி : ————.

**பரீட்சார்த்தி யார் முன்னிலையில் கையொப்பமிடுகின்றாரோ அன்னாரின் அத்தாட்சிப் பத்திரம்***
(கீழேயுள்ள குறிப்பைப் பார்க்க)

———— வேலை பார்ப்பவரும்/வசிப்பவரும் என்னால் நன்கு அறியப்பட்டவருமாகிய ———— என்பவர் 1965 ஆம் ஆண்டு ————மாதம் ————தேதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தையிட்டாரென நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.
பெயர் : ————.
பதவிப்பெயர் அல்லது நிலை : ————.
விலாசம் : —— ——.

**திணைக்களத்தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்***

பரீட்சார்த்தி 7/8* ஆம் கூண்டில் கூறியுள்ள சேவைப்பற்றிய விவரங்கள் சரிபார்க்கப்பட்டுச் சரியெனக் காணப்பட்டுள்ளனவெனவும் அன்னாரின் நடத்தை திருத்திகரமாயிருந்ததெனவும் குறித்த பிரமாணங்களின்படி அன்னார் இப்பரீட்சையெடுப்பதற்கு அருகதையுடையவரெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

மேலும் குறித்த பரீட்சார்த்தி முன்னர் ————என்னும் பெயருடையராயிருந்தாரெனவும் 1957, ஒகத்து 18 ஆந் தேதியின் 394 ஆம் இல. திறைசேரியின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தனது பெயரை ———— ஆக மாற்றியுள்ளாரெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி : ————.

தேதி : —— ——.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்கு உட்படப் பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் நியமனம் பெற்றுச் சேவை செய்யுங்காலத்தில் எப்போதாவது அவர் இப்பரீட்சையெடுப்பதற்குத் தகுதியற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் நான் தந்துள்ள கூற்றுக்கள் யாவும் உண்மையானவையெனவும் நான் ஒட்டும் முத்திரைகள் உண்மையானவையெனவும் அவை முன்னர் உபயோகிக்கப்படவில்லையெனவும் எனது நேர்மையின் பேரில் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

| |
|---|
| பரீட்சார்த்தி இங்கு 20 ரூபா பெறுமதியான முத்திரை யொட்டிக் கையொப்பமிடல் வேண்டும். |

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

தேதி : ————.

**குறிப்பு :** பரீட்சார்த்தி ஓர் அரசாங்க அலுவலகத்தில் நிரந்தரமாய் அல்லது தற்காலிகமாய் வேலைசெய்தால் அன்னார் இயன்றவிடத்துத் திணைக்களத் தலைவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும். மற்றைப் பரீட்சார்த்திகள் ஒரு சமாதான நீதவான் அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அல்லது வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு அல்லது 2,400 ரூபாயோ அதற்குமேலோ ஆண்டுச்சம்பளம் பெறும் ஒரு நிரந்தரமான அரசாங்க உத்தியோகத்தர் அல்லது தரைப்படை, கடற்படை, விமானப்படை உத்தியோகத்தர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடல்வேண்டும்.

* பொருத்தமற்றவைகளைக் கீறிவிடுக.

## பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறிநடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வடதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்குமேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவர்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிட மிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடை யெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு.**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத் தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழி றப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதிவிடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2

எச். எல். விமலசூரியா,
பதில் பரீட்சாதிகாரி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**வவுனியாவிலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரதப் பகுதிப் பண்டசாலைக்குமிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் கொண்டுசெல்லல் 1965–66**

1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் ஒரு வருடகாலத்திற்கு வவுனியாவிலுள்ள சாராயக்குதத்திற்கும் புகையிரதப் பகுதிப் பண்டசாலைக்குமிடையே சாராயமும் மற்றும் பொருள்களும் கொண்டு செல்வதற்குரிய கேள்விப்பத்திரங்களை 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணம் வட பகுதி உதவி மதுவரி அதிகாரி பெற்றுக்கொள்ளுவார்.

ஓர் கச்சேரியில் இதற்கென ரூபா 10/- கொடுத்துப் பெற்ற றிசீத்தைக் காட்டி மேற்படி உதவி மதுவரி அதிகாரியிடம் பெறக்கூடிய பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த விஷயத்தைப்பற்றிய விபரங்களை வடபகுதி உதவி மதுவரி அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. திருநாவுக்கரசு,
மதுவரி அதிகாரிக்காக.

மதுவரி அதிகாரியின் கந்தோர்,
கொழும்பு 6,
1965 ம் ஆண்டு புரட்டாசி மீ 20 ந உ.

9—1087—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**யாழ்ப்பாண உப–பிரிவு**

கிளிநொச்சி நீர்ப்பாசன உப பிரிவில் உள்ள ஆனைக்கிடங்கு நல்ல நீர் தேக்கத்திற்கு கலிங்குடன் ஒழுங்காக்கியும் வெள்ளத்தடுப்பு அணையும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வட பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 19.10.65 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடன் திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 26,000/- ரூபாவுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வட பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் இடமும் அல்லது அவரின் கீழ் உள்ள எல்லா நீர்ப்பாசனப் பொறியியலாளரின் கந்தோரிலும் அலுவலக நேரங்களில் 30.9.65 இலிருந்து 15.10.65 வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியினராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தின் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகத்தில் ரூபா 50/- கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக் கட்டணம் ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்விக்காகிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் கிளிநொச்சியிலுள்ள யாழ்ப்பாண உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. ஜெயசிங்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாண உப–பிரிவு.

கிளிநொச்சி,
1965 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 16 ந உ.

9—1009—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**மன்னார் உப–பகுதி**

நிதியாண்டு 1965–66 பொருள்களை ஏற்றியிறக்கல் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் இவ்வாண்டு ஐப்பசி மாதம் 19 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் வடபகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் (வவுனியா) ஏற்றுக்கொள்ளப்படும்.

வடபகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்தும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் உப-பகுதி நீர்ப்பாசன பொறியியலாளர்களிடமிருநதும் பெறத்தக்கதான கேள்விப்பத்திரங்கள் பிரதியோடு விண்ணப்பிக்கவேண்டும். சகல விபரங்களும் தகவல்களும் மன்னார் உப–பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஓர் கச்சேரியில் அல்லது முருங்கன் நீர்ப்பாசன அலுவலகத்திற் கட்டுப்பணமாக ரூபா 25/- கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுடன் தாம் நீர்ப்பாசன இலாகாவில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர் என்பதை நிரூபிப்பவர்க்கே கேள்விப்பத்திரங்கள் இவ்வாண்டு ஐப்பசி மாதம் 15 ம் திகதி வரையில் விநியோகிக்கப்படும்.

பத்தாயிரம் (10,000/-) ரூபாவிற்கும் அதற்கு மேலும் பதிவுசெய்து கொண்ட ஒப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் பெறுவதற்கு தகுதியுடையோராவர்.

சே. பூபாலசிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மன்னார் உப–பகுதி.

முருங்கன்,
1965 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 16 ந உ.

9—1008—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

## கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

**திருகோணமலை துறைமுகத்திலிருந்து (சீனக்குடா உட்பட) திருகோணமலையிலிருக்கும் கூ. மொ. வி. ஸ்தாபன கிட்டங்கிகளுக்கும், புகையிரத சாமான் சாலைக்கும், கொழும்பிலிருக்கும் கூ. மொ. வி. ஸ்தாபன கிட்டங்கிகளுக்கும் சீமேந்து கையாளுவதற்கும் எடுத்துச் செல்வதற்கும்**

மேல் குறிப்பிட்ட சேவைக்குக் கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, 21, வக்சோல் வீதியிலிருக்கும் பிரதான அதிகாரியால் 1965, செப்டம்பர் 29 ம் திகதி புதன்கிழமை பி. ப. 2 மணிமட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் நன்மதிப்புள்ள வாகன ஒப்பந்தக்காரர்களிடமிருந்தோ அல்லது கூட்டுறவுச சங்கங்களிடமிருநதோ அல்லது தனஞல் குறைந்தது 10 வாகனங்கள் எந்த ஒரு நாளிலோ குறைந்த அறிவித்தலில் கொடுக்கக்கூடியவர்களிடமிருந்தோ வருவனவே அனுசரிக்கப்படும்.

மற்ற விபரங்களும் கேள்விப் பத்திரங்களும் ரூபா 250 கேள்விப் பத்திர சேமிப்புப் பணம் கட்டி 1965, செப்டம்பர் 29 ம் திகதி புதன்கிழமை 12 மணிக்கோ அல்லது முன்போ கொழும்பு 10, 85, மக்கலம் வீதியிலிருக்கும் கூ. மொ. வி. ஸ்தாபன வாகனப் பகுதி அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான அதிகாரி,
கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்.

21, வக்சோல் வீதி,
கொழும்பு 2,
16.9.1965.

9–1029—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

## நீர்ப்பாசன இலாகா—செங்கலடி

மட்டக்களப்பு பெரும்பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினுல் 19.10.65 செவ்வாயக்கிழமை காலை 10 வரை செங்கலடி உப பிரிவிலுள்ள உன்னிச்சைத் திட்டத்தின் கீழ் உள்ள முலலாமுனை அணைக்கட்டு வேலைக்கு கேள்விபபத்திரங்கள் நீர்ப்பாசன இலாகாவில ரூபா 20,000 க்கும் அதற்கு மேற்படவும் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரரிட மிருந்து எற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை 15.10.65 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் ரூபா 25 கொடுத்து மட்டக்களப்பு பெரும்பிரிவு நீர்ப்பாசன காரியாலயத்திலும் செஙகலடி, கல்முனை, அம்பாறை உப பிரிவிலுள்ள நீர்ப்பாசனக் காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இது சம்பந்தப்பட்ட ஏனைய விபரங்களை செங்கலடி உப பிரிவு நீர்ப்பாசனக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசன பொறியியலாளர்.
செங்கலடி உப பிரிவு.

செங்கலடி, 14.9.65. த. ம.

9–1042—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

## சுகாதாரத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ம் திகதி (இருநாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், குருணகல், எற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுச்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச் சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணபபம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்:—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருணகல், கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப்பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினுல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டியமுறை.**—எல்லாக் கோள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், குருணகல் என்று முகவரிப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின இடதுபக்கத்து மேல் மூலையில சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக கொண்டுள்ள உறைகளைப பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கோள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுசசீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பத்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாக திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைபபடியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச்செலவுத்தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனுல் கேள்வியில் குறிக்கபபடிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும், விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைபபடியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்திலே பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணைவைப்புப் பணங்கள்.**—இங்கு தாப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திநகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறைபோன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுககிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

குருணகல்,
1965 ம் ஆடு செத்தெம்பர் மீ 18 ந வ.

வி. அ. பொன்சேகா,
பதில் சுகாதார சேவை அத்தியட்சகர்.

### குறித்த அட்டவணை

| (1) | (2) | (3) | (4) | (5) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | |
| தாபனங்கள் குருணகல பகுதி | கேள்விக் கட்டுப் பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | |
| | ரூபா | ரூபா | | மீன் | மா. இ. | கருவாடு | கா. க. | மீன் | மா. இ. | கருவாடு | கா. க. |
| அம்பன்பொல பி.வி. | 1C0 | 300 | 1965.10.19 மு.ப. 10 | 300 | 250 | 600 | 800 | 500 | — | 950 | 1850 |

9–1004—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

## இலங்கை அரச விமானப்படை

1965/66 நிதி ஆண்டிற்கு காலாட்படை, இலங்கை கடற்படை, இலங்கை அரச விமானப்படை ஆகியோருக்கு மருந்து வகைகள் விநியோகஞ் செய்வதற்கு மெழுகிட்ட கேள்விகளைக் கொழும்பு செனற் கட்டிடத்திலுள்ள பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் கேள்விச் சபைத் தலைவர் 1965 அக்டோபர் மாதம் 22 ந் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

2. கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 100 யைக் கொழும்பு சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப் படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன அதிகாரியாகவும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டிய பின்னரே கேள்விப் படிவங்கள் கொடுக்கப்படும். கேள்விப் படிவங்கள் 1965, அக்டோபர் மாதம் 21 ந் திகதி நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளாக உறையிலிட்டு மெழுகிட்டு அவ்வுறையின் இடதுபுற மேல் மூலையில் " படையினர்க்கு மருந்து வகைகள் விநியோகஞ் செய்வதற்கு " எனக் குறிப்பிட்டு கேள்விச் சபைத் தலைவர், பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு, செனற் கட்டிடம், கொழும்பு என முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும்.

4. முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட திகதி, நேரம், இடத்தில் கேள்விகள் பரிசீலனை செய்யப்படும்போது கேள்விக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

5. மேலதிக விபரங்கள் கொழும்பு, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப் படைத் தலைமை நிலையத்தில் பெறலாலது.

ஈ. ஆர். அமரசேகரா,
எயர் கொமடோர்,
விமானப் படைத் தலைவர்.

9-1032—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## காட்டுத் திணைக்களம்—ஏல விற்பனை

*கல்முனை அரசினர் மரக்காலையில் இருக்கும் 1320·4 கன அடிகொண்ட 132 முதிரை, சவண்டலை, பாலை, ருனை, கல்லொதி முதலிய மரங்கள் மட்டக்களப்பு வன பரிபாலன அதிகாரியால் 21.10.1965 காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விறகப்படும். கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களைப் பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.*

*ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது கல்முனை அரசினர் மரக்காலையிலோ பெற்றுக்கொள்ளலாம்.*

க. அருள்செல்வம்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி,
மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு,
1965 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 11 ந் உ.

9-1015—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

# ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 1965/66 ஆண்டுக்குரிய துறைவரி விற்பனவு

1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதியிலிருந்து 1966 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையிள்ள கால எல்லைக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள துறையின் ஆய வரிகள் பெறுவதற்கும் சகல போக உரிமைகளையும் வாங்குவதற்குமான கேள்விப் பத்திரங்கள் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகளுக்குட்பட இத்தால் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தின் சார்பாகவும் எக்கச்சேரியிலாவது ரூபா நூறு (100/–) பிணையாகக் கட்டப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் அணைக்கப்படவேண்டும். இவ்வாறான பற்றுச் சீட்டு காட்டப்படுமிடத்து மட்டக்களப்புக் கச்சேரியில் வழங்கப்படும் மாதிரிப் பத்திரங்களின் மேலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

" மட்டக்களப்பு மாவட்டத்தில் ...................... (இங்கே துறையின் பெயர் எழுதவும்) துறை விற்பனவு " என்று இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்டு முத்திரை (சீல்) இடப்பட்ட தபால் உறைகளிலேயே ஒவ்வொரு கேள்விப்பத்திரமும், கிடைப்பதற்கான கடைசி நேரத்திற்கு முன்னதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ந் திகதி திங்கட்கிழமை கீழே குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக்கச்சேரியில் சமுகம் கொடுக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில், கேட்டு விண்ணப்பிக்கும் கொந்திருத்தைத் திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத் தகைமையுடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் தமது பிரிவுக்குரிய அரசாங்க அதிபரினுலோ பிரிவுக் காரியாதிகாரியாலோ கொடுக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பகுதிக்குரிய உதவிக் கூட்டுறவு ஆணையாளரிடம் இருந்து தமது சங்கம் துறையை நடத்தி ஆயவரி அறவிடத் தகுதியுள்ளதென்றும் கேள்விப் பணத்தில் மூன்றில் ஒரு பங்கைப் பிணைப் பணமாகக் கட்டக்கூடிய நிதி வசதியுடையது என்றும் ஓர் அத்தாட்சிப் பத்திரத்தைக் கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் அவ்விடத்தில் விற்பனை நிபந்தனைகளுக்கிணங்க கையொப்பமிட்டு வாங்கிய பெறுமதியில் மூன்றில் ஒரு பங்கைப் பணமாக அரசாங்க அதிபருக்குப் பிணைகட்ட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனவு நிபந்தனைகட்கு இணங்கவோ பிணை கட்டுவதற்கோ, பிணை உறுதிக்கு வேண்டிய தொகையைக் கட்டுவதற்கோ தவறுமிடத்து அவரினுல் கொடுக்கப்பட்ட கேள்விப்பத்திர சட்டணத்தை அவர் இழந்தவராவர். அத்துடன் அவர் அரசாங்கத்தின் கீழ் எவ்வித கொந்திருத்து வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப்படுவார். இவ்விதிவிலக்கைத் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொந்திருத்துக்காரரினுல் அல்லது கொந்திருத்துக்காரர்களினுல் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டுப் பிணையும் கொடுக்கப்பட்டபின் மற்றையோரின் கேள்விப் பத்திரம் பணம் மீட்டுக் கொடுக்கப்படும்.

எவ்வித காரணமும் காட்டாது எக்கேள்விப் பத்திரத்தையும் அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான தனியுரிமை அரசாங்க அதிபருக்கே உரித்தாகும்.

தற்போது பாலதகள் வேலைசெய்யும் துறைகளுக்குப் பாலதகள் கொடுக்கப்படும். வள்ளங்கள் கிடைக்குமாயின் வள்ளங்கள் கொடுக்கப்படும். அவ்வாறு வள்ளங்கள் கிடைக்காவிடில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காகத் தம்முடைய சொந்த வள்ளங்களையே உபயோகிக்க வேண்டும்.

துறைவரி விதிகளின்படி தபால் கொண்டுசெல்லும் சேவகர்கள் துறைக்கூலி செலுத்த வேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் தபாற் சேவகர்களிடமிருந்து துறைக்கூலி ஏற்கக் கூடாது.

மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

எஸ். வேலும்மயிலும்,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கா.

கச்சேரி, மட்டக்களப்பு,
1965 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 18 ம் உ.

| துறையின் விபரம் | காரியாதிகாரியின் பிரிவு | கேள்விப் பத்திரங்கள் முடிவடையும் நேரம் |
|---|---|---|
| கிரான் .. | கோறளைப்பற்று .. | முற்பகல் 11.00 |

9-1003—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரகாரலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேனே பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.